ஓம் நமோ நாராயணாய நம:

25 MAY 1931
THE TANJORE ... TANJORE. *

# ஸ்ரீ வைஷ்ணவ
# அஷ்டாக்ஷர மந்திரார்த்த
## சங்கிரகம்.

113
109

இது

தஞ்சைமாநகரம்
ஸ்ரீமத்ஸ்ரீ பிரஹ்மானந்த சுவாமிகளால்

அருளிச்செய்யப்பட்டு

தஞ்சை
ஸ்ரீ சங்கரவிலாச சாரதாமந்திர முத்திராசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

*All Rights Reserved.*

1925.

இதன் விலை] [அணா ௨.



தஞ்சை

ஸ்ரீ பிரஹ்மாநந்தஸ்வாமிகள்.

உ

# முகவுரை

## வெண்பா.

அட்டாக் கரத்திற் காரந்த நற்பொருளை
பட்டாங்கி லுள்ளபடி தான்பகர்ந்தான் — சிட்டருடன்
சேர்ந்திருக்கத் தன்னடிக்கீழ் சிறியேனை யாண்டகுரு
மூர்த்தி **பிரஹ்மா நந்தமுனி**

இந்நூல் தஞ்சை ஸ்ரீ பிரஹ்மநிஷ்ட பண்டித வெ. குப்புஸ்வாமி மஹாராஜ் என்னும் பூர்வாச்சிரம நாமம் பூண்டிருந்த ஸ்ரீ ல ஸ்ரீ வி. பிரஹ்மாநந்தஸ்வாமிகள் உண்மை நூலாராய்ச்சியாலும் தமது சுவாநுபவத்தினாலும் ஓம் நமோ நாராயணாய என்னும் தாரக (அஷ்டாக்ஷர) மந்திரத்திற்கு நயம்படவுரை என்னும் முதுமொழிக் கிணங்க ரிக்வேதம் முதற்பாதத்திலும் யஜுர்வேதம் இரண்டாம் பாதத்திலும், புராணேதிகாசங்களிலும் வியாகரண முதலிய தத்துவங்களாலும் பக்திமார்க்காநுசாரமாகவும், வேதாங்கம் ஆறனுள் ஒன்றாகிய நிருக்தியின் வழியாயும் பிரஹ்மசூத்திரத்தின் படியுமுள்ள அர்த்தங்களை சாங்கோபாங்கமாய் விளக்கியும் சாஸ்திரமுணர்ந்தோர் யாவர்க்கும் முரண்படா

தாகவும் மிகத்தெளிவாயும் இனிய தமிழ் நடையில் ஸ்ரீ வைஷ்ணவ அஷ்டாக்ஷர மந்திரார்த்த சங்கிரகம் என்னும் இந்நூலை உலகோபகாரார்த்தமாக அருளிச் செய்தார்கள். கருணாநிதியாகிய எமது ஸத்குருமூர்த்தியா லருளிச்செய்யப்பட்ட விந்நூல், கற்றவர்க்கும் மற்றவர்க்குஞ் சிரோரத்னமாயும், உண்மை யுரைப் போனாகிய நற்றேசிகன் றிருவருளால் உபதேசிக்கப் பெற்று உபாசிப்பவர்கட்கு இம்மையிலேயே அதன் பயனாகிய எல்லா நலங்களையும் முக்தி சுகத்தினையும் அடைவிப்பதாயும் விளங்கு மென்பதற் கையமில்லை யென்பதனை இதனைப்படிப்பவர் தாமே தெரிந்து கொள்ளக்கூடும். இதனை வாசிப்பவர்கட்கு இம்மந்திரார்த்தத்தி லிச்சையுண்டாகவே செய்யும். சுகவிருப்பமுடைய மாந்தர்க்கு இஃது ஆவசியக மானதொன்றாம்.

சுபம்! சுபம்! சுபம்!

ரு. பாக்கியம் பிள்ளை,
மானேஜிங் டிரஸ்டி,
ஸ்ரீ சங்கரவிலாச சாரதாமந்திரம்,
தஞ்சை.

உ

## ஸ்ரீ வைஷ்ணவ

# அஷ்டாக்ஷர மந்திரார்த்த

## சங்கிரகம்.

### மங்கலம்.

கயமுகன் வாணி யாசான் கனகமன் றதனி லாடும்
நயமிகு சிதம்ப ரேச னற்சிவ காமி யம்மை
சயமிகு விண்டு பாத சாற்றிய விவர்க டாளில் [தம்.
நயமொடு பணிந்து சொல்வே னல்லவட் டாக்க ரார்த்

க. ॐ *नमो नारायणाय । ஓம் *நமோ நாராயணாய।

(க) ஓம் நமோ நாராயணாய என்னும் தாரகம் சித்துவடிவம் என்று உபாசிக்கவேண்டும். ஓம் என்னும் ஏகாக்ஷரம் ஆத்மஸ்வரூபமாம்; நம: என்னும் இரண்டக்ஷரம் பிரகிருதிஸ்வரூபமாம்; நாராய

* नम: நம: என்பதிலுள்ள : விசர்க்கம் பின்வரும் நகாரத்தை நோக்கி ஒ வெனத் திரிந்தது.

ணாய என்னும் பஞ்சாக்ஷரம் பரப்பிரஹ்மஸ்வரூப மாம் என்று இவ்வாறு எவன் அறிகின்றானோ, அவன் அமிருதனாகின்றான். ஓம் என்பது பிரஹ்மா ஆகின்றது. நகாரம் விஷ்ணுவாகின்றது. மகாரம் ருத்திரன் ஆகின்றது. நகாரம் ஈசுவரன் ஆகின்றது. ரகாரம் அண்டவிராட்டு ஆகின்றது. யகாரம் புருஷன் ஆகின்றது. ணகாரம் பகவான் ஆகின்றது. யகாரம் பரமாத்மா ஆகின்றது. இந்த நாராயணனது அஷ்டாக்ஷரம் பரம புருஷன் ஆகின்றது. இது ரிக்வேதம் முதற்பாதம்.

(உ) ஓம் என்னும் இவ்வக்ஷரம் பரம்பிரஹ்மமாம். அதுவே உபாசிக்கவேண்டியதாம். இதுவே சூக்ஷ்மாஷ்டாக்ஷர மாகின்றது. அந்த எட்டுவடிவினதாகிய இது எண்வகையினதாகின்றது. அகாரம் முதலக்ஷரமாகின்றது. உகாரம் இரண்டாமக்ஷரமாகின்றது. மகாரம் மூன்றாமக்ஷரமாகின்றது. பிந்து நாலாமக்ஷரமாகின்றது. நாதம் ஐந்தாமக்ஷரமாகின்றது. கலை ஆறாமக்ஷரமாகின்றது. கலாதீதை ஏழாமக்ஷரமாகின்றது. தற்பரம் எட்டாமக்ஷரமா

கின்றது. தாரகத்துவத்தினுல் (சம்சாரத்தினின்று கடத்துவதாதலால்) தாரக மாகின்றது. அதே தாரக மான பிரஹ்மம் நீயாக அறி. அதுவே உபாசிக்க வேண்டியது. இங்கு இவை சுலோகங்களாகின்றன. (க) அகாரத்தினின்று பிரஹ்மாவாகிய ஜாம்பவான் என்னும் பெயருடையவர் உண்டானுர். (உ) உகாரத்தினின்றுண்டானவர் உபேந்திரனுகியஹரிநாயகர் (சுக்கிரீவன்). (ங) மகாரத்தினின்றுண்டானவர் சிவனுகிய ஹநுமான். (ச) பிந்து ஈசுவரனுகிய சுவயம் சக்கிராஜனுன சத்துருக்கனனும். (ரு) நாதம் மகாப் பிரபுவாகிய சங்கமெனப்படும் பரதன். (சு) கலை புருஷனுகிய சாக்ஷாத் ஆதிசேஷனுன லக்ஷ்மணன். (எ) கலாதீதை பகவதியாகிய சுவயம் சீதை யென்னும் பெயருடையதாம். (அ) தற்பரம் பரமாத்மாவாகிய புருஷோத்தமனுன ஸ்ரீராமன். ஓம் என்னும் இவ்வக்ஷரம் இவ்வெல்லாமுமாம். அதன் உபவியாக்கியானமாம் ஆனது, ஆகத்தக்கது, (இனி) ஆவது, யாதொரு மற்றையதத்துவம், மந்திரம், வர்ணம், தேவதை, சந்தசு, ரிக்கு, கலை, சக்தி, சிருஷ்டியென்னும் வடிவின, எவன்

இப்படி அறிகின்றானோ, (அவன் அமிருதனாகின்றான்.) யஜுர்வேதம் இரண்டாம் பாதம்.

உ. ओं नमो नारायणाय । ஓம் நமோ நாராயணாய। ஓம் அதாவது நாராயணனுக்கு நம: (நமஸ்காரம்) नराः अयनं यस्य स नारायणः । तस्मै नारायणाय = நாரங்கள் எவனுக்கு அயனமோ அவன் நாராயணன். அவனுக்கு என்று நான்காம்வேற்றுமை உருபேற்று நாராயணாய (நாராயணனுக்கு) என்றாயிற்று. அவனுக்கு நமஸ்காரம் என்பது பொருள்.

இங்கு நாராயணன் என்னும் சொல்லிற்குப் புராணேதிகாசங்களின்படி பல்வகைப் பொருள் விரிக்கப் படுகின்றது :—

(க) नाराः நாரங்கள் என்பது ஜலம்(ஜலதத்துவம், பிரளயகாலத்து ஜலம், பாற்கடல்). அது எவனுக்கு அய(ஸ்தா)னமோ அவன் நாராயணன். (नारा + अयनः = नारायणः நார + அயனன் = நாராயணன். (இங்கு ரேப(ரகார)த்தின் பரமான न நகாரம் ण ண ஆகும் என்னும் விதியால் நகாரம் ணகாரமாகத்திரிந்தது.)

(௨) नाराः आपः = நாரங்கள் அப்புக்கள். அப்புக்களாவன நரசமூகம் நரர்களின் சமூகம் நாரம. அது அயனம் (ஸ்தானம்) ஆக எவனுக்குளதோ, அவன் நாராயணன் (சர்வப்பிராணிகளின் புத்தியாகிய குகையில் வசித்தலால் சுத்தசைதன்யம் என்பது பொருள்).

(௩) अय गतौ + भावे ल्युट् । கதியாகிய அர்த்தத்தில் வரும் அயவென்னும் தாதுவோடு பண்புப்பொருளில் ल्युट् ல்யுட் என்னும் விகுதிசேர அயனம என்றாயிற்று. கதியர்த்தமுள்ளவை யாவும் பிராப்தியர்த்தமுள்ளனவுமாகும் என்னும் நியமத்தால் நாரதநின் (நரவென்னும் சொற்பொருளான பரமாத்மாவின் ஞானம் அல்லது முக்தி நாரமெனப்படும். அந்த ஞானத்தின் அல்லது முக்தியின்) பிராப்தி எவனிடத்தினின்றுமுண்டாகின்றதோ அவன் நாராயணன்.

(௪) நாரம் என்பது சாரூப்பிய முக்திவசனமாம். அதற்கு அயனம் எத்தேவனே, அவன் நாராயணன்.

(௫) नाराः நாரங்கள் என்பன செய்த பாபங்களாம். அயனம் செல்லுதலாம். ஆகவே செய்த அப்

பாபங்களெல்லாம் எவனினின்றும் செல்லுகின்ற னவோ அல்லது எவனது ஸ்மரணமாத்திரத்தால் விலகுகின்றனவோ அவன் நாராயணன்.

(௬) நாரம் என்பது மோக்ஷணமாகிய (மோசித் தலாகிய) புண்ணியம். அயனம் ஞானம். அவ்வி ரண்டன் ஞானம் எவனிடத்தினின் றுண்டாகுமோ, அவன் நாராயணன்.

(௭) नारा: நாரங்கள் என்பது பிறந்தனவாகிய தத் துவங்களாம். அவைகளே அவருக்கு அயன்மாயி ருத்தலால் நாராயணன்.

(௮) பிரகிருதிக்கு மேலுள்ளவனை இருபத்தை ந்தாமவன் நரன். அவனுடைய இப்பூதங்கள் நாரங்க ளெனப்படும். அவற்றிற்கும் எதனால் அயன்மாவா னோ, அதனால் நாராயணன்.

(௯) நரனது தர்மம் நாரம். அதனைத் தனது பிரா ப்திக்கு அயனமாக (வழியாக) வுடையவன் நாராய ணன்.

(௧௦) நரசமூகத்திற்குத் தான் அயனம் (ஆலம்ப னம்=பற்றுக்கோடு) ஆதலாலும் நாராயணன்.

(கக) दोषः தோஷம், अर அரம் என்னும் சொல்லிரண்டும் அபின்னார்த்தமுடையனவா(பரியாய பதங்களா)யிருத்தலாலும் नञ् (ந) என்பதற்கு விருத்தார்த்தமிருத்தலாலும் அரம் என்னும் தோஷத்திற்கு விருத்தமான குண (நல)ங்கள் (நாரா:) நாரங்கள் எனப்படும். அவற்றின் அயனமா (ஆசிரமா) யுள்ளவன் நாராயணன் அதாவது குணபூர்ணன். (न + अराः = नाराः . ந + அரா: = நாரா:).

(கஉ) नञः : நஞ் (ந) என்பதற்கு இன்மைபொருளாதலால் அர(தோஷ)த்திற்கு ஆசிரயமாகாதவன் நாராயணன் அதாவது தோஷங்களிற்றூரமானவன்.

(கங) க. நரசம்பந்தியாதலாலாவது, உ. இதனால் (नरीयते நரீயதே) கொண்டுபோகப்படுகின்றது என்பதனாலாவது, ங. எதனால் (नारमणं) ரமித்தலின்மையில்லையோ அது என்பதனாலாவது, ச. அரம் (தோஷம்) இன்றிய வேதத்தினாலுண்டாகிய தன்மையினாலாவது ஞானம் நார மெனப்படும். அதற்கு விஷயமாகும் தன்மையால் அயன (ஆசிரய) அதாவது ஞேயமாதலின் நாராயணன்.

(கச) க. அர (தோஷ) மின்றிய தன்மையால், உ. அல்லது அரதி (இரமிப்பின்மை) இன்றிய தன்மையால், ங. அல்லது அர (க்ஷய) மின்றிய தன்மையால் முக்தர்கள் நாரர்கள் எனப்படுவா. அவர்கட்கு அயனம் (ஆசிரயம்) ஆகுவோன் நாராயணன் அதாவது அடையப்படுபவன்.

நாராயணனுக்கு வணக்கம் என்பதனால் தனது சுவதந்திரமிழந்து அவனுக்குத்தாசனாதல் குறிப்பிக்கப் படுகின்றது.

ங. **ओं नमो नारायणाय।** ஓம் நமோ நாராயணாய।

ஓம் = நாராயணன் பொருட்டு நம: அதாவது எனதென்று கொண்டிருக்கும் பத்திரபுஷ்ப பலாதிகளையும் தேகமுதலியவற்றையும் சர்வகர்மங்களையும் அர்ப்பிக்கின்றேன். இதனால் எனதென்று கொண்டிருந்தவை யாவும் அவனுடைமை யாதலால் மீண்டும் அவற்றில் எனது என்னும் புத்தி வாராமை சித்திக்கின்றது.

ச. **ओं नमो नारायणाय।** ஓம் நமோ நாராயணாய।

ஓம் = [illegible] – நாராயணா! **नमः** நம: = உமக்கு நமஸ்காரம். [illegible] அய அதாவது எனது அபீஷ்டம்

சித்திக்கும்பொருட்டு அல்லது யான் தம்மோடு அபேதமுற எழுந்தருள்வீராக. அவரது பிரசன்னத்தன்மையால் சகாமனுக்கு இஷ்டசித்தியும நிஷ்காமனுக்கு அபேதசித்தியும பெறப்படுகின்றன.

௫. ओं नमो नारायणाय । ஓம் நமோ நாராயணாய।

ஓம்=नारायणाय நாராயணாய அதாவது இவ்வுடல் பொருளாதிய யாவும் நாராயணனுக்குரியனவாம்; मः மः= என்னுடையவை; न ந = அல்ல.

௬. ओं नमो नारायणाय । ஓம் நமோ நாராயணாய।

नमः நமः! ஆதாவது மः (மஸ்) என்னும் விகாரம்; ந = இல்லாதவனே; விகாரமற்றவனே! நாராயண! அய = என்னிடம் வருக.

யானும் பிராந்திசித்தமான விகாரமொழிந்து உன்னோடு அபேதமுற என்பால் வருக என்பது பொருள்.

௭. ओं नमो नारायणाय । ஓம் நமோ நாராயணாய।

நாராயணாய=நாராயண தாதாத்மியத்தின் பொருட்டு, நமः = நமனமாகிய தியானத்தினைச் செய்கின்றேன்.

அந்தத் தியானம் உத்தம அதிகாரிக்கு நாராயணன் நான்; நான் நாராயணன் என்னும் வடிவினதாம். மத்தியமாதிகாரிக்கு தாசன் நான்; நான் தாசன் என்னும் வடிவினதாம்.

அ. ओं नमो नारायणाय । ஓம் நமோ நாராயணாய।

நாராயண! = லக்ஷ்மீநாத! நம:=நான் மா வென்னும் ஞானலக்ஷ்மியில்லாதவன் அதாவது அஞ்ஞானி. அய = என்னிடம் வருக.

எனவே உனது வரவால் எனது அஞ்ஞானம் ஒழிந்து ஞானலக்ஷ்மியினையடைந்து உனது ஸ்வரூபமாவேன் என்பது சித்தித்தது.

௯. ओं नमो नारायणाय । ஓம் நமோ நாராயணாய।

ஓம்=நாராயண என்பது தத் பதார்த்தம்; நம: என்பது துவம் பதார்த்தம். அய என்பது அஸி பதார்த்தமாம்.

ஆகவே தத்துவமஸி (அது நீயாயிருக்கிறாய்) என்னும் மகாவாக்கியமேயாகின்றது இவ்வஷ்டாக்ஷரம்.

(கo) ओं नमो नारायणाय। ஓம் நமோ நாராயணாய!

ॐ ஓம் என்பது अ அ + उ-உ + म्-ம் என்னும் மூன்றும் கூடிய பிரணவ வடிவ ஒரு அக்ஷரமாம். இதனை ஏகாக்ஷரமென்றும், தாரகமென்றும் கூறு வர்.

இதில் (க) अ-அ என்பது ஸ்ரீய:பதியாம் (லக்ஷ்மியின் நாயகனும்). अव रक्षणे= அவ என்பது இரக்ஷித்தற்பொருளில் வரும் தாதுவாம் (வினைப்பகுதியாம்). அத்தாதுவினலாகியதாய் அ என்பது சர்வ ரக்ஷணையைக்காட்டுகின்றது. இதில் ஏறி லோபித்த (தொக்க) சதுர்த்தி (நான்காம் வேற்றுமை) ஜீவனுடைய தாதர்த்தியத்தை (அவன் பொருட்டு என்பதனை)ச் சொல்லுதலால் சம்ரக்ஷகனது சர்வசேஷித்துவம் சித்திக்கிறது. (உயிருக்கு உடல்போலச் சர்வ உயிர்களும் அவனுக்குச்சேஷமாம் அதாவது சாதனமாம். அதனையுடையவன் சேஷி. அவனது தன்மை சேஷித்துவம்).

(உ) उ-உ என்பது அவதாரணார்த்தமாம். (நிச்சயப்பொருளுடையதாம்) அதாவது அகாரவாச்சிய

னுக்கே இச்சம்பந்தத்தினை நியமித்துக்கொண்டு, மற்றவர்களோடு நிருபாதிகத்துவமாக (உபாதியின்றிய தன்மையாக)த்தொடர்பில்லை என்று நிச்சயிப்பதாம்.

(ங) म-ம் என்பது 'मन ज्ञाने மன (மன்) என்னும் தாது ஞானத்திலாம்' என்றல் முதலியவற்றிலாவது அலலது अस्मत्-அஸ்மத் (நான்) என்னும் சப்தத்தில் (பெயர்ப்பகுதியில்)சாந்தஸப் பிரக்கிரியையால் (சந்தஸை நோக்கிய விஷயமாக) லுப்த சேஷமாய் (ஆறும் வேற்றுமைத் தொகைச்சொல்லாக) ஆவது ஏகவியஞ்சனமாத்திரபதமாய் (ஒரு மெய்யெழுத்துமாத்திரமான சொல்லாய்) ஞானநந்தஸ்வரூபனை முன் சொன்ன சேஷத்வ வாச்சியமாகிய ஆத்மாவைக் காட்டுகிறது.

இவ்வக்ஷரம் மூன்றினால் ஸ்வயம் பிரகாசனாய், அநுகூலஸ்வபாவனாய், ஞாதாவாய் (அறிபவனாய்), ஸ்வஸ்மைபாஸ்யமானனாய் (தன்பொருட்டு விளங்குகிறவனாய்) உச-தத்துவங்கட்கு வேறானவனாயுள்ள ஜீவாத்மா (நான்) சர்வகாரண ரூபனும், சர்வரக்ஷகனும், சர்வசேஷியுமான ஸ்ரீயःபதிக்கே அநந்யார்ஹ

நிருபாதிக சேஷபூதன் (வேறொருவனுக்குரியவனாகாத உபாதியின்றிய சேஷவடிவன்) என்று அநுசந்தித்தவனாவன்.

பதிக்குச் சேஷன் எனவே பத்தினி(லக்ஷ்மி)க்கும் சேஷன் என்பதாயிற்று, மத்தியமாக்ஷரம் (நடுவெழுத்தான உகாரம்) லக்ஷ்மிவாசகமாய் மகாரவாச்சியனான ஜீவன் பதிபத்நி இருவருக்கும் தாசபூதன் என்னும் யோஜனையில் (பொருத்தத்தில்) அவதாரணார்த்தமான மத்தியமபதமாம்.

**नम:**—நம: என்பதிலுள்ள **म:**—ம: என்பது எனக்கு என்று விரோதிவர்க்கம் (பகையினம்) எல்லாவற்றையும் குறிக்கும். ஆகிஞ்சந்யாதிகளும் (ஒன்றுமில்லாமை முதலியனவும்) பலிக்கும்.

**न**—ந என்னும் சொல் ம: என்னும் இவ்விரோதிவர்க்கத்தினை விலக்குகின்றது அதாவது நான் எனக்கு உரியேனல்லேன்; வேறொன்றறகும் உரியேனல்லேன்; என் கிரியைகளும் என்னுடையவாகா. நானும் என்னுடையவ னல்லேன்; பகவானுக்கே

ஆகாநின்றேன் என்று * நிருக்தியில் சொல்லுகிற படி ஜீவனான தானும் தன்னுடைமையும் தனக்கும் பிறருக்கும் உரியனவாகாமல், பகவதநந்யார்ஹ சேஷத்வம் (பகவானைவிட வேறொருவருக்குச்சாதன மாகாமை) உடையுவனவாம் என்பது பிரணவம் நம: என்பவற்றில் அநுசந்திக்கப்பட்டதாம். நம: என்பது பிரபத்தியாம். (எல்லாவற்றையும் அவனுக்கு ஒப்புவித்து அவனைச் சரணடைதல் பிரபத்தியாம்).

**नारायण:**—நாராயண: என்பது நாரங்களை அயன மாக உடையவன் அல்லது நாரங்கட்கு அயனமாயி ருப்பவன் என்னும் பொருளுடையதாம். **र:**-ர: என்பது அழியும் வஸ்துக்கள். **नर:**—நர: என்பது அழியாத சேதன வஸ்து. **नार:**—நார: சேதனசமூகம் (பன்மை). அதனை அயன (இட) மாக உடையவன் நாராயணன். அல்லது **नर:**—நர: என்பது எவ்விதத் தாலும் அழிவில்லாத நேதாவான (நடத்துபவனான) சர்வேசுவரன், அவனோடு உள்ளவாறு சம்பந்த முடைய எல்லாவற்றையும் நாரசப்தத்தாற் சொல்லு தலுமாம்.

* வேதாங்கம் ஆறனுள் ஒன்று.

(க) அதனை அயனமாக (இருப்பிடமாக அல்லது வியாப்பியமாக) உடையவன் நாராயணன்.

(உ) நாரங்கட்குத் தான் அயனமா யிருத்தலாலாவது உபாயமாயும், உபேயமா (உபாயத்தாலடைப்படுவதா)யும், ஆதாரமாயும் நிற்கும் நிலையாம். அந்நிலையினையுடையவன் நாராயணன்.

**नारायणाय**—நாராயணாய என்பதிலுள்ள சதுர்த்தி (நான்காம் வேற்றுமை) தாதர்த்யார்த்தத்தை (அதுவாதற்றன்மையாகிய பொருளை) முன்னிட்டு அதன் பயனாய்ப் பிரார்த்தனீயமான (பிரார்த்திக்கத்தக்கதான) கைங்கரியத்தினைக் குறிக்கிறது.

ஓம் நமோ நாராயணாய என்னும் இத்திருமந்திரத்தில் வாக்கியார்த்தத்தினைப் பலவாறு அநுசந்திப்பர்.

(க) அகாரவாச்சிய நாராயணனை ஸ்ரீய:பதிக்கு நான் அநந்யார்ஹ சேஷபூதன்; எனக் குரியேனல்லேன் என்று திருமந்திர முழுவதும் ஸ்வரூப (தன்வடிவ) பரமாஞல் தன் ஸ்வரூபஸ்திதிப் பிரவிர்த்திபரசேஷதா (பிறனுக்குச் சாதனமாதலாகிய) ஏகரசங்களும், பாரதீனந் (பிறன் வசத்தனாதல்)களுமா யிருக்

குந் தன்மை இடத்திற் கேற்றபடி அநுசந்திக்கத் தக்கதாம.

(உ) பிரணவம் நம: என்பன ஸ்வரூபபரமாய், மேல் நான் நாராயணாய அதாவது நாராயணன்பொருட்டாவே னென்று பலப் பிரார்த்தனையுமாம். இப்பிரார்த்தனையால் சேஷத்வபலமான ஸ்வரூபாநுரூப (தன்வடிவத்திற் கொத்தவடிவ) கைங்கர்ய விசிஷ்ட (பணிவிடையாகிய விசேஷமுடையவ)னாவேன் என்பது சித்திக்கின்றது.

(ங) பிரணவம் ஸ்வரூபபரமாய், மேல் நம: நாராயணாய என்னும் இரண்டு பதங்களாலும் அத்தியாகரி (வருவி)க்கப்பட்டகிரியாபதங்(வினைச்சொற்)களோடு கூடி அநிஷ்ட நிவிருத்தியையும் இஷ்டப் பிராப்தியையும் அபேக்ஷிக்கிறவனாகவுமாம்.

(ச) அகாரவாச்சியனான நாராயணனுக்கு நான் அநந்யார்ஹ சேஷபூதன். அவனையே சரணாகப் பற்றினேன். அவன் திருவடிகளிலே ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி(பொருந்தி) வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம் என்று இப்பதங்கள் முறையே

ஸ்வரூபம் உபாயம் புருஷார்த்தமென்பவற்றைப் பிரகாசிப்பிப்பனவு மாம். இவ்வடைவே அநந்யார்ஹ சேஷத்வமும், அநந்ய உபாயத்துவமும், அநந்யப் பிரயோஜனத்துவமும் பெற்ற அதிகாரி பெத்தத்தசையில் முக்தரோ டொப்பான்.

இப்படிப் பிரணவாதிகளில் சோதிதஸ்வரூபனும் ஸ்வரூப அநுரூபமான உபாயத்திலும் வியவஸ்திதனுமான (வியவஸ்தைபெற்ற)வனுக்கு "उत्तरपूर्वाघयोरश्लेषविनाशौ முந்திய (சஞ்சித) பிந்திய (ஆகாமி) பாபங்களிரண்டன் பற்றுமையும் நாசமுமுண்டாம்." என்னும் பிரஹ்மசூத்திரத்தின்படியே "போய்ப் பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினிற் றூசாகும்" என்பது சித்திக்கும்.

இப்பத்தாவது வைஷ்ணவ விசிஷ்டாத்வைத சம்பிரதாயாநுசாரமான அர்த்தமாம்.

ஸ்திரீ சூத்திரர் முதலியோருக்குப் பிரணவத்தில் அதிகாரமின்மைபற்றி அதற்குப் பிரதியாக அம்

அல்லது ஸ்ரீம் என்பதனைச்சேர்த்து உபதேசிப்பர் சம்பிரதாயமுணர்ந்தோர்.

இத்திருமந்திரோபாஸகர்கள் மந்திரவடிவமான ஸ்ரீமந் நாராயணனைச் சகுணரூபமாகவாவது நிர்குண ஸ்வரூபமாகவாவது அவரவர் அதிகாரத்திற்கு ஏற்ற படி மந்திர ஜபத்தோடு பாவிக்கவேண்டும்.

வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்தியும்னன், அநிருத்தன் என்பன அல்லது சுத்தப்பிரஹமம், அந்தர்யாமி, சூத்திராத்மா, விராட்டு என்பன நாராயணனது சதுர் வியூகமாம். இதன் லக்ஷணத்தை விரிந்த நூல்களிற்காண்க.

இந்தப்படி இம்மந்திரார்த்தத்தினைச் செவ்வையாய்த் தெரிந்துகொண்டு தமது ஆசாரியர்கள் மூலமாகக் கேட்ட மந்திரத்தை அநுஷ்டிப்பார்களாயின், இகபர சுகங்களையும் முக்தியினையும் விரைவில் எளிதாகப்பெறலாம். இதிற்சம்சயமில்லை. கேவலம் மந்திரத்தை உச்சரிப்பதனால் நெடுங்காலத்திற்குப்பின் பகவானது பிரசாதத்தால் அதன் அர்த்த விசாரமுண்டாய்ப் பின்னர் பயன்பெறக்கூடியதாகும்.

தஞ்சைவாழ் பிரஹ்மா நந்தன் றமியனேற் கருளி ஞலே
விஞ்சையி லுயர்ந்த வட்டாக் கரத்துக்கோ ருரைசெய் தீங்
துஞ்சிடா தெவரும் போற்றித் தூயநன் மனத்த ராகி [தான்
வஞ்சக மாயை நீங்கி மலரடி சேர்வர் திண்ணம்.

இந்நூல் ஸ்ரீமந்நாராயணனுடைய பிரேரணையால் நாராயணப்பிரீதியர்த்தமாகவே செய்யப்பட்டது.

இவ்வாறு ஸ்ரீ வைஷ்ணவ அஷ்டாக்ஷர
மந்திரார்த்த சங்கிரகம்
முடிந்தது.

ஓம்தத்ஸத் ஸ்ரீ நாராயண
பரப்பிரஹ்மணே நம: